உ

சிவமயம்.



திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய,

திண்ணனார் என்னும்

# கண்ணப்பநாயனார்

## திவ்வியசரித்திரம்.

இஃது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கியையச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

சர்வதாரிஞு புரட்டாசிமீ

1888.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

அதைத்தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அதுசெல்லும் அடிவழியே சென்றார். நாணன், காடன் என்கின்ற இரண்டுவேடர்கள்மாத்திரம் அவருக்குப்பின் ஓடினார்கள். அந்தப்பன்றிநெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒருமரத்தின்நிழலிலே நின்றது. திண்ணனார் அதைக்கண்டு, அதனைச்சமீபித்து, உடைவாளையுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினார். நாணனும், காடனும், இறந்துகிடந்த அந்தப்பன்றியைக்கண்டு, திண்ணனாரை வியந்து வணங்கி, நெடுந்தூரம் நடந்துவந்தபடியால பசி நம்மை மிகவருத்துகின்றது. நாம இந்தப்பன்றியை நெருப்பிலே காய்ச்சித்தின்று, தண்ணீர்குடித்து, வேட்டைக்காட்டுக்கு செல்லப்போவோம் என்றார்கள். திண்ணனார் அவர்களைநோக்கி, இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது. என்றுகேட்க, நாணன் அந்தத்தேக்கமரத்துக்கு அப்பாலேபோனால் மலைப்பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது என்றான் அதைக்கேட்ட திண்ணனார், இந்தப்பன்றியை எடுத்துக்கொண்டுவாருங்கள். நாம அங்கேதானே போவோம என்றுசொல்லி அதைநோக்கி நடந்து, அரைக்காதவழி தூரத்துக்கு அப்பால இருக்கின்ற திருக்காளத்திமலையைக்கண்டு, நாணனைநோக்கி நமக்குமுன்னாகத்தோன்றுகின்ற மலைக்குப்போவோம என்றுசொல்ல, நாணன் இந்தமலையிலே குடுமித்தேவர் இருக்கிறார்; நாமபோனாற் கும்பிடலாம, என்றான்.

திண்ணனார், இந்தமலையைக்கண்டு இதை அணுக அணுக என்மேல்ஏற்பட்ட பெரியபாரம் குறைகின்றதுபோலும. இனி உண்டாவது யாதோ ? அறியேன் என்றுசொல்லி, அதிதீவிரமாகியவிருப்பத்தோடும விரைந்துசென்று, பொன்முகலியாற்றை அடைந்து, அதன்கரையிலிருக்கின்ற மரநிழலிலே கொண்டுவந்தபன்றியை இடுவித்துக் காடனைநோக்கி, நீக்கடைகோலசெய்து நெருப்பை உண்டாக்கு. நாங்கள் இம்மலையின்மேலேறிச் சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டுவந்துசேருவோம என்றுசொல்லி, நாணனோடும அந்தப் பொன்முகலி நதியைக்கடந்து, மலைச்சாரலை அடைந்து, மலையிலே நாணன்முன்னேற, தாமும் ஏறிச்சென்று சிவலிங்கம இருந்ததைக் கண்டார். கண்டமாத்திரத்திலே, பரமசிவனுடைய அருட்பார்வையைப்பெற்று, இரும்பானது தரிசனவேதியினாலே உருவம்மாறிப்பொன்மயமானதுபோல, முன்னுள்ள குணங்கள்மாறிச் சிவனிடத்தில்வைத்த அன்புருவமானார். நெடுங்காலம பிரிந்திருந்த தன்குழந்தையைக்கண்ட பிதாவைப்போலத் தாழாமல விரைந்தோடி, தோள்கள் நெருங்கும்படி அக்கடவுளைத்தழுவி, மோந்து முத்தமிட்டார். நெடுநேரம பெருமூச்சுவிட்டுக்கொண்டுநின்று, சரீரம்முழுதிலும உரோமாஞ்சிதங்கொள்ள இரண்டுகண்ணினின்றும ண்ணீர்சொரிய, வெயிலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, இந்தச்சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரி

யம்? என்றுசொல்லி ஆனந்தங்கொண்டார். ஐயையோ! சிங்கம், யானை, புலி, கரடிமுதலிய துட்டமிருகங்கள் சஞ்சரிக்கின்றகாட்டிலே நீர் யாதொருதுணையுமின்றி வேடர்போலத்தனியேயிருப்பதுஏது? என்றுசொல்லித் துக்கித்து, தம்முடையகையிலிருந்த வில்லுங்கீழேவிழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார். பின்ஒருவாறு தெளிந்து, இவருடையமுடியிலே நீரைவார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர்யாரோ என்றார். அப்பொழுது சமீபத்திலேநின்ற நாணன், நான் முற்காலத்திலே உம்முடையபிதாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுது, ஒருபிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து, இலையையும் பூவையும் சூட்டி, உணவை ஊட்டி, சிலவார்த்தைகள் பேசினதைக்கண்டிருக்கிறேன். இன்றைக்கும் அவனே இப்படிச்செய்தான்போலும் என்றான். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச்செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் பிரீதியாகிய செய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு ஐயையோ! இவருக்கு அமுதுசெய்தற்கு இறைச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியேயிருக்கின்றார். இறைச்சிகொண்டுவரும்பொருட்டு இவரைப்பிரியவோ மனமுமில்லை. இதற்கு என்னசெய்வேன்? எப்படியும் இறைச்சி கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சுவாமியைப்பிரிந்து, சிறிதுதூரம்போவார், கன்றைவிட்டுப்பிரிகின்ற கலையீற்றுப்பசுப்போல அவரிடத்திற்குத் திரும்பிவருவார், கட்டிஅணைத்துக்கொள்வார்; மீளப்போவார்; அற்பதூரம்போய் அத்தியந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப்பார்த்து நிற்பார்; சுவாமி! நீர் உண்பதற்குமிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத்தெரிந்துகொண்டு வருவேன் என்பார்; நீர் யாதொருதுணையுமின்றி இங்கே தனியே இருக்கிறபடியால் நான் உம்மைப்பிரியமாட்டேன்; உமக்குப்பசிமிகுந்தபடியால் இங்கேநிற்கவுமாட்டேன்; ஐயையோ! நான் என்னசெய்வேன்? என்றுசொல்லிக்கொண்டு கண்ணீர் இடைவிடாதுபொழியநிற்பார். பின்பு ஒருவாறு போய்வரத்துணிந்து, வில்லையெடுத்துக்கொண்டு, கையினாலே கும்பிட்டு, சுவாமி சந்நிதானத்தை அருமையாகநீங்கி மலையினின்றும் இறங்கி, நாணன்பின்னேவர, பிறவிஷயங்களிலே உண்டாகும் ஆசை பரமாணுப்பிரமாணமாயும் இன்றி, அன்புமயமாகி முகலியாற்றைக்கடந்து பொன்கரையேறி அங்குள்ள சோலையிலே புகுந்தார். அதுகண்டு காடன் எதிரேபோய்க் கும்பிட்டு, நெருப்புக்கடைந்து வைத்திருக்கின்றேன்; பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய அடையாளப்படிப்பார்த்துக்கொள்ளும்; திருப்பிப்போதற்குவெகுநேரம்சென்றுபோயிற்று. நீர் இவ்வளவுநேரம் தாழ்ந்தது என்ன என்றான். நாணன் அதைக்கேட்டு, இவர் மலையிலே சுவாமியைக்கண்டு அவரைத் தழுவிக்கொண்டு மரப்பொந்தைப்பற்றி விடாத உடும்பைப்போல

அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தச்சுவாமி
உண்ணுதற்கு இறைச்சிகொணடுபோம்பொருட்டு வந்திருக்கிறா;
நமது குலத்தலைமையை விட்டுவிட்டார்; அந்தச்சுவாமிவசமாய்வி
ட்டார்; என்றான். உடனே காடன் திண்ணனே! நீர் என்னசெய்
தீர்? என்னபைத்தியங்கொண்டீர்? என்றுசொலல, திண்ணனார் அ
வன்முகத்தைப்பாராமல், பன்றியை நெருபபிலேவதக்கி, அதினு
டைய இனியதசைகளை அம்பினாலே வெவ்வேறாகக்கிழித்து, அம்
பிலேகோத்து, நெருப்பிலேகாய்ச்சி, பதமாகவெந்தவுடனே சுவை
பார்க்கும்படி, அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினா
லே மெல்ல மெல்லப் பன்முறை அதுக்கிப்பார்த்து, மிக இனியன
வாகிய இறைச்சிகளெல்லாவற்றையும தேக்கிலையினாலே தைக்கப்
பட்ட கல்லையிலேவைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எலலா
வற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக்கணட நாணன் கா
டன் இருவரும இவர் மிகபைத்தியங்கொண்டிருக்கின்றார். பெ
றுதற்கரிய இறைச்சியைக்காய்ச்சிப் பலலினால் அதுக்கி, வீணாக
உமிழ்கின்றார். மற்றை இறைச்சியைப் புறத்திலே எறிந்துவிடுகி
றார். தாம் மிகப்பசியுடையராயிருந்தும, அதனை உணகின்றார் இல
லை. எங்களுக்குத் தருகின்றாரும இல்லை ; இவர் தெய்வப்பைத்திய
ங்கொணடிருக்கின்றார். இதனைத்தீர்க்கத்தக்கவழி ஒன்றையும அறி
யோம். தேவராட்டியையும நாகனையும் அழைத்துக்கொணடுவநது
இதைத்தீர்க்கவேண்டும்; வேட்டைக்காட்டிலேநிற்கின்ற ஏவலாள
ரையுங்கொண்டு நாம் போவோம என்று நினைத்துக்கொண்டு
போனார்கள்.

திண்ணனார் அவ்விருவரும்போனதை அறியாதவராகி, சீக்கி
ரமாகக் கல்லையிலே மாமிசத்தைவைத்துக்கொணடு, திருமஞ்சன
மாட்டும்பொருட்டு, ஆற்றில் நீரை வாயினாலமுகந்து, பூக்களைக்
கொய்து, தலைமயிரிலேசொருகி, ஒருகையிலே விலலையும அம்பையு
ம், மற்றக்கையிலே இறைச்சிவைத்த தேக்கிலைக்கலலையையும் எடு
த்துக்கொண்டு, ஐயோ! என்னுயிர்த்துணையாகிய சுவாமி மிகுந்த
பசியினால் இளைத்தாரோ என்றுநினைந்து இரங்கிப் பதைபதைத்து
ஏங்கி, தன்குஞ்சுக்கு இரை அருத்துதற்குத்தாழாதோடுகின்ற பற
வைபோல மனோகதியும பின்னிட ஓடிப்போய்க் கடவுளை அடை
ந்தார். அடைந்து அவருடைய திருமுடிமேல் இருந்தபூக்களைத்
தம்முடைய காற்செருப்பினாலமாற்றி, தம்முடையவாயிலஇருக்கி
ன்ற திருமஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உள்ள அன்பை உமி
ழ்பவர்போலத் திருமுடியின்மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில்
இருந்த பூக்களைத் திருமுடியின்மேல்வணங்கிச்சாத்தி, தேக்கிலையி
லேபடைத்த இறைச்சியைத்திருமுன்னேவைத்து, கொழுமையா
கிய இறைச்சிகளெல்லாவற்றையும் தெரிந்து, அமபினாற்கோத்து நெ
ருப்பிலே பதத்தோடுகாய்ச்சிப் பல்லினால் அதுக்கி, நாவினாலே சு

வைபார்த்துப் படைத்தேன். இவ்விறைச்சி மிக நன்ருயிருக்கின்றது; சுவாமீ! இதை அமுதுசெய்தருளும என்றுசொலலி, உணபித்தார். பின்பு சூரியன் அஸ்தமயனமாயிற்று. திண்ணனர் அவ்விரவிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத் துனபஞ்செய்தலகூடுமென்று அஞ்சி, அமபுதொடுக்கபபட்ட வில்லைக் கையிலேபிடித்துக்கொண்டு, மறந்தும கண்ணிமையாமல் சுவாமிக்குப பக்கத்திலே சாக்கிரதையாக நின்ரூா. நின்ற திண்ணனர் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சிகொண்டுவரும்பொருட்டு வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே போனா. அதுநிற்க.

அறிவு, அருள், அடக்கம், தவம், சிவபக்தி முதலியவைகளெல்லாம திரண்டொருவடிவம் எடுத்தாற்போன்றவரும, நல்வினை தீவினைகளாலவரும் ஆக்கம்கேடுகளிலே சமபுததிபண்ணுகின்றவரும், யாவரையும மோகிபபிக்கவலல மகாசௌந்தரியமுள்ள ஸ்திரீகள் வலியவந்து தம்மைத்தழுவினும பரமாணுபபரிமாணமாயினும் சித்தம் திரியாமல் அவாகளைத் தாயெனமதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தியபபரைத் தினந்தோறும் சைவாகமப்படி அருச்சிப்பவரும் ஆகிய சிவகோசரியார் என்பவா, பிராமமுகூர்த்தத்திலே எழுந்துபோய், பொன்முகலியாற்றிலே ஸ்நாநம்பண்ணி, சுவாமியை அருச்சிக்குமபொருட்டுத் திருமஞ்சனமும பத்திரபுஷ்பமும எடுத்து, சிவநாமத்தைஉச்சரித்துக்கொணடு, சுவாமி சந்நிதானத்திலேபோனர். போம்பொழுது அங்கே வெநத இறைச்சியும எலும்பும் கிடக்கக்கணடு,நடுநடுங்கி,குதித்துப் பக்கத்திலேஓடினர். ஓடிநின்று, தேவாதிதேவனே ! தேவரீருடைய சந்நிதானத்தை அடைதற்கு அஞ்சாததுஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இநத அநுசிதத்தைச்செய்தாாகள்போலும. அவர்கள் இபபடிச் செய்து போதற்குத் தேவரீா திருவுளம் இசைந்தீரோ என்று சொல்லி, பதறி அழுது விழுந்து புரணடார். பின்பு, சுவாமிக்கு அருச்சனை செய்யாமல் தாழ்த்தலால் பயன்யாது? என்று நினைநது, அங்கே கிடந்த இறைச்சியையும் எலும்பையும்கல்லையையும் திருவலகினுல மாற்றி, சம்புரோக்ஷணம்செய்து, மீளப் பொன்முகலியாற்றிலே ஸ்நானஞ்செய்து திரும்பிவந்து,வேதமந்திரத்தினுலேசுத்திசெய்து, உருத்திர சமக நமகத்தினல், சுவாமிக்கு அபிஷேகமபணணி, பத்திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்தார். செய்து திருமுன்னேநின்று, இரண்டுகைகளையும் சிரசின்மேலேகுவித்து, இரண்டுகண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரிய, திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிக உருகி, இளகநாத்தழும்ப, கீதநடையுள்ளதாகிய சாமவேதம்பாடினர். பாடியபின் பலமுறை பிரதக்ஷிணமசெய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அருமையாக நீங்கிப்போய் தபோவனத்தை அடைந்தார். அதுநிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலேசென்ற திண்ணனர், பன்றி, மான், கலை, மரை, கடமை என்னுமிருகங்களைக்கொன்று, அவைகளினிறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில்வைத்து, கோற்றேனைப்பிழிந்து, அதனேடுகலந்து முன்போலத் திருமஞ்சனமும புஷ்பமுமகொண்டு மலையினேலே ஏறி, சுவாமிசந்நிதானத்தை அடைந்து, முன்போலப்பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னேவைத்து, இந்த இறைச்சி முனகொண்டுவநததுபோலன்று; இவை பன்றி, மான், கலை, கடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி; இவைகளை அடியேனும் சுவைத்துப்பார்த்திருக்கின்றேன்; தேனும் கலந்திருக்கின்றது; தித்திக்கும்; என்று சொலலி, உண்பித்து, அவருக்குப்பக்கத்திலே பிரியாமல்நின்ருர். அப்பொழுது முதனுட்போன நாணனும் காடனும் ஆகிய இருவராலும தன்புத்திராகிய திண்ணனருடைய செய்கைகளை அறிந்தநாணன் ஊணும உறக்கமுமின்றித தேவராட்டியையுங்கொணடுவந்து, திணணனைப பற்பலதிறத்திஞலே வசிக்கவும, அவர்வசமாகாமையைக்கண்டு, சிந்தைநொந்து இனியென்னசெய்வோம் என்றுசொலலிக்கொணடு, அவனைவிட்டுத் திருமபிப்போய்விட்டாரகள்.

இருவினையொப்பும் மலபரிபாகமுமுடைய திணணனர் பகற்காலத்திலே மிருகங்களைக்கொன்று, சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக்காலத்திலே நித்திரைசெய்யாமல சுவாமிக்கு அருகேநின்றும், இப்படித்தொணடுசெய்துவந்தார். சிவகோசரியாரும் தினந்தோறுமவநது, சநநிதானத்திலே இறைச்சிகிடந்தலைக்கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவிதிப்படி அருச்சித்துக்கொண்டு இந்த அநுசிதம் நிகழாமல அருளலவேண்டுமெனறு பிரார்த்தித்துவந்தார். திருக்காளததியபபா அந்தச்சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்குமபொருட்டு ஐந்தாநாள் இராத்திரியிலே அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, அன்பனே ! அவனை வேடுவன்என்று நீ நினையாதே, அவனுடைய செய்கைகளைச்சொல்லுவோம் கேள். அவனுடைய உருவமுழுதும நம்மேல்வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவுமுழுதும நமமை அறியும அறிவே. அவனுடைய செய்கைகள் எலலாம நமக்கு இதமாகிய செய்கைகளே. நமமுடையமுடியின்மேல உன்னுலேசாததப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன்வைக்கின்ற செருப்படி நம்முடையகுமாரனகிய சுபபிரமண்ணியனுடைய சாலினும பாரக்க நமக்கு மிகுந்த ஆனநதத்தைத்தருகின்றது. அவன தன்வாயினலே என்மேல் உமிழுகின்ற ஜலமானது அன்புமயமாகியஅவனுடையதேகமென்னும் கொள்கலத்தினின்றும ஒழுகுகினறபடியால், கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களைப் பாரக்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலைமயிரிலே செருகிக்கொண

டுவந்து நமக்குச்சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல்போல விழுதலால், பிரம விஷ்ணுமுதலாகியதேவர்கள் நமக்குச்சாத்தும புஷ்பங்களும் அவைகளுக்குச்சற்றேனும சமானமாகாவாம; அவன நமக்குப்படைக்கின்ற மாமிசம் பதமாகவெந்திருக்கின்றதோ என்று அன்பினால உருகி, இளகியமனசினோடும் மென்று, சுவைபார்த்துப படைக்கப்பட்டபடியால், வேதவிதிப்படி யாகம் செய்கின்றவாகள் தரும் அவியிலும பார்க்க நமக்கு அதிகமதுரமாயிருக்கின்றது. அவன் நமமுடைய சந்நிதானத்தில நினறு சொலலும சொற்கள் நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மை அன்றி மற்றொருவரையும அறியாது வெளிப்படுதலால் வேதஙகளும மகாமுநிவாகள் மகிழ்ந்துசெய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எலலாவற்றினும் பாாக்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினாலாகிய செய்கைகளை உனக்குக் காட்டுவோம், நீ நாளைக்கு நமக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்துபார், என்றுசொலலி மறைந்தருளினார். சிவகோசரியாா, சொபபனாவத்தையை நீக்கிச் சாக்கிராவத்தையையடைந்து,பரமசிவன தமக்கு அருளிச்செய்த வாாத்தைகளை நினைந்து நினைந்து அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர்குலத்திலே பிறநத அவருக்கு வேதாகமாதி சாஸ்திரஙகளிலே மகாபாண்டித்தியமுடைய மகாமுனிவாகள்தேவர்களிடத்திலும் காணப்படாதசமானாதிகரகிதமாகிய இவ்வளவு பேரன்புவநதது. ஐயையோ! எவ்வு அருமைஎன்று ஆச்சரியமும, இபபடிப்பட்ட பேரன்பர்செய்த அன்பினைசெய்கைகளைப் புழுத்தநாயினும கடையனாகியபாவியேன் அநுசிதம என்று நினைநதேனே! ஐயையோ!இது என்னகொடுமை என்று அச்சமும நாணமும அடைந்து உஷக்காலத்திலேபோய்பபொனமுகலியாற்றிலே ஸ்நானமபணணி, மலையில ஏறி முன்போலச் சுவாமியை அருச்சித்து அவருக்குப பிற்பக்கத்திலே ஒளித்திருநதார்.

சிவகோசரியார் வருதற்குமுன்னே வேட்டையாடுதற்குச்சென்ற திண்ணனார் வேட்டையாடி இறைச்சியும், திருமஞ்சனமும,புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரமாகத்திரும்பினா. திரும்பி வரும்பொழுது பல பல துாச்சகுனங்களைக்கண்டு, இந்தச்சகுனங்களெல்லாம் உதிரங்காட்டுகின்றன. ஆ! கெட்டேன், என் கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ அறியேனே என்று மனங்கலங்கி அதிசீக்கிரமாக நடந்தார். அடியார்களுடைய பக்திவலையில் அகப்படுகின்ற அருட்கடலாகிய பரமசிவன் திணணனாருடைய அன்புமுழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலதுகண்ணினின்று இரத்தமசொரியப்பண்ணினார். திண்ணனார் தூரததிலேகண்டு, விரைந்தோடிவந்தார். வந்த உடனே

இரத்தம் சொரிதலைக்கண்டார்;காணவும வாயிலுள்ள திருமஞ்சன ம் சிந்த, கையில் இருந்த இறைச்சி சிதற, அமபும வில்லும விழ, த லையிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்துசோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலச் சீக்கிரமா கப் பதைபதைத்து நிலத்திலேவிழுந்தார். விழுந்தவர் எழுந்து போய் இரத்தத்தைப் பலமுறை கையினுலே துடைக்க, அதுகாலு தல் தவிராமையைக்கண்டு, அதற்கு இன்னதுசெய்வோம் என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார். நெடும்பொழுது உள்ளுயிர்த்தல் இன்றி இறந்தவர்கள்போலக்கிட ந்தார். பின் ஒருவாறுதெளிந்து, இப்படிச்செய்தவர்கள் யாவர்? எ ன்று சொல்லிக்கொண்டு எழுந்தார், எங்கும்பார்த்தார்; வில்லையெ டுத்து அம்புகளைத்தெரிந்துகொணடு என்னுடைய சுவாமிக்கு இத் தீங்குவந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ, இநத வனத்திற் சஞ்சரிக்கின்ற துஷ்டமிருகங்களாலோ, யாதென்றுதெ ரியவில்லையே, என்றுசொல்லி மலைபபக்கங்களிலே நெடுந்தூரமட் டுந் தேடிப்போனுர். வேடாகளையேனும் விலங்குகளையேனுமகா ணுதவராகி, திரும்பிவந்து குறைவில்லாத துன்பத்தினுலே மனம் விழுங்கப்பட்டுச் சுவாமியைக் கட்டிக்கொண்டு இடியேறுண்ட சிங் கேறுபோல வாய்விட்டுக் கண்ணீர்சொரிய அழுதார்; என்னுயிரி னும சிறந்தவரும், அடைநதவர்கள் அன்பினுலே பிரியமாட்டாத ர்ரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இநதத்துன்பம் சம்பவித்ததோ? இதைத்தீர்ப்பதற்கு மருநதொன்றை அறியேனே!ஐயையோ ! இத றகு என்னசெய்வேன்? என்றுர். இந்த உதிரம என்னசெய்தால நிற்குமோ? இந்தத்தீங்கைச் செய்தவர்களைக்காணேன்; வேடர்கள் அம்பினுலாகிய புண்ணைத் தீர்க்கின்ற பச்சிலைமருந்துகளை மலையடி வாரத்திலே பிடுங்கிக்கொண்டுவருவேன் என்றுசொல்லிக்கொண் டுபோனுர். தன்னினத்தைபபிரிந்துவந்த இடபமபோலச் சுவாமி யைப்பிரிந்து வந்ததினுல் வெருட்கொணடு வனங்களெங்குந்திரிந் து, பலவகையாகிய பச்சிலைகளைப்பிடுங்கிக்கொண்டு, சுவாமிமேல் வைத்த மனசிலும் பார்க்க விரைந்துவந்து, அம்மருந்துகளைப்பிழிந் து,அவர்கண்ணிலே வார்த்தார்; அதினுல அக்கணணி லிரத்தம த டைபடாமையைக்கண்டு, ஆவிசோர்நது, இனி நானிதற்கு என்ன செய்வேன்? என்று ஆலோசித்துக்கொண்டு,நின்றுர்; நிற்க"ஊனுக் கு ஊனிடல்வேணடும" என்னும் பழமொழிஅவருடைய மனதி லே வந்தது. உடனே இனி என்னுடைய கண்ணை அம்பினு லே எடுத்து அப்பினுல் சுவாமியுடைய கணணினின்றுபாயும் இர த்தம் தடைப்படும்; என்று முடிவு செய்துகொண்டு, மனம கிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து, அம்பைஎடுத்து,தம்முடை யகண்ணைத்தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினுர். அ ப்பினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக்கண்டார், உட

னே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்திக்கு
தித்துப்பாய்ந்தார்; மலைபோலப் பருத்தபுயங்களிலே கைகளினு
லேகொட்டி ஆரவாரித்தார்; கூத்தாடினர். நான்செய்த செய்கை
நன்று நன்று; என்றுசொல்லி வியந்து,அத்தியந்த ஆநந்தத்தினாலே
உன்மத்தர்போலாயினர்; இப்படிச் சந்தோஷசாகரத்திலேஉலாவும்
பொழுது திருக்காளத்தியீசுரர் அந்தத்திண்ணனாருடைய பேரன்
பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங்காட்டுதற்குத் திருவுளங்கொ
ண்டு, தமமுடைய மற்ற இடக்கணணிலும இரத்தம்சொரியப்பண்
ணினர். அது திண்ணனாருடைய பிரமானந்தமாகிய சந்தோஷ
சாகரத்தை உறிஞ்சியது. அக்கினி நிரயத்துள்ளேவிழுந்து, நெடுங்
காலந்துன்பமுற்று, அதனை நீக்கிச் சுவர்க்கத்தை அடைந்து, இன்ப
முற்றேனொருவன் பின்னும அந்நிரயத்திலே விழ்ந்தாற்போல, தி
ண்ணனர் உவகைமாறிக் கரையில்லாத துன்பக்கடலிலே அழுந்தி,
ஏங்கி, பின்னர் ஒருவாறுதெளிந்து, இதற்குநான் அஞ்சேன்; மருந்
துகைகண்டுகொணடேன்; இன்னும் ஒரு கண்ணிருக்கின்றதே; அ
தைத்தோண்டிஅப்பி இந்நோயைத்தீப்பேன் என்றுதுணிந்து,தம
முடைய கண்ணைத்தோணடியபொழுது சுவாமியுடையகண் இவ்வி
டத்திலிருக்கின்றது என்று தெரியும்பொருட்டு, ஒரு செருப்புக்கா
லை அவர்கண்ணின் அருகிலே ஊன்றிக்கொண்டு பின்னே மனசி
லே பூர்த்தியாகிய விருப்பத்தோடும் தமமுடைய கண்ணைத்தோ
ண்டும்படி அம்பைவைத்தார்.

தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றாதவராகி, வே
தாகமங்கள்தோன்றிய தமமுடைய அருமைத் திருவாய்மலரைத்
திறந்து, "கண்ணப்பா நிற்க" என்று அருளிச்செய்து அவருடைய
கண்ணைத்தோணடும கையைத் தம்முடைய திருக்கரத்தினாலே
பிடித்துக்கொண்டார். பிரமாதி தேவர்கள் சமஸ்தரும் வேதகோ
ஷத்தோடும் நிலம்புதையக் கற்பகப்பூமாரிபெய்தார்கள். மகாஞா
னியாகிய சிவகோசரியார் இந்தச்சமாசார முழுமையுங்கண்டு,
அத்தியந்த ஆச்சரியமடைந்து சுவாமியைவணங்கினர்; அற்றை
நாள்முதலாகப் பெரியோர்கள் சுவாமிசொல்லியபடியே அவருக்குக்
**கண்ணப்பர்** என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்கா
லமாக உஷ்ணமாகிய அக்கினிமத்தியில நின்று ஐம்புலன்வழியே
செல்லாதபடி மனசை ஒடுக்கி,அருந்தவஞ்செய்கின்றவர்களுக்கும்
கிட்டாத பரம்பொருளாகிய கடவுள், ஆறுநாளுக்குள்ளே பெருகி
ய அன்புமேலீட்டினாலே தம்முடைய திருநயனத்தில் இரத்தத்
தைக்கண்டு அஞ்சித் தம்முடையகண்ணை இடந்து அத்திருநயன
த்தில் அப்புந் திண்ணனாருடைய கையைத் தமது அருமைத்திரு
க்கரத்தினாலே பிடித்துக்கொண்டு, நிஷ்களங்க பத்தியையுடைய

கண்ணப்பா! நீ நமக்கு வலப்பக்கத்திலே நில் என்று திருவருள்புரிந்தார். இதைப்பார்க்கிலும் பெறவேண்டிய பெருமைபேறு யாது? சுபம்! சுபம்!!

கண்ணப்பநாயனார் முத்தியடைந்தநாள்:—
தைமாதம் - மிருகசீரிடநக்ஷத்திரம்.

## கண்ணப்பநாயனார்

திவ்வியசரித்திரம்-முற்றிற்று.

திருவருட்பிரகாசவள்ளலார்
என்னும்
சிதம்பரம்-இராமலிங்கசுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# கலைமகளார்திருப்பதிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தவளமலர்க்கமலமிசை யிருக்குமம்மனையைச் சாந்தமுத்த, குவளைமலர்க்கண்ணுளைப் பெண்ணரசைப் பெண்ணமுதைக் கோதிலாத, பவளவிதழ்ப்பசுங்கொடியை நான்முகனார்நாவோங்கும் பாவைதன்னைக், கவளமதகயக்கொம்பின் முலையாளைக்கலைமாதைக் கருதுவோமே. (க)

சங்கம்வளர்ந்திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதிதன்னையன்பா, துங்கமுறக்கலைபயிற்றி யுணாவளிக்குங்கலைஞானத் தோகைதன்னைத், திங்கணுதற்றிருவையருட் குருவைமலரோங்கியபெண்டெய்வந்தன்னைத், தங்கமலைமுலையாளைக் கலையாளைத்தொழுதுபுகழ் சாற்றுகிற்பாம். (உ)

கலைபயின்றவுளத்தினுக்குங் கரும்பினைமுக்கனியை யருட்கடலையோங்கு, நிலைபயின்றமுனிவரருந் தொழுதேத்தநான்முகனார் நீண்டநாவிற், றலைபயின்றமறைபயின்று மூவுலகுங்காக்கின்ற தாயைவாகைச், சிலைபயின்றநுதலாளைக் கலைவாணியம்மையை நாஞ்சிந்திப்போமே. (௩)

திருச்சிற்றம்பலம்.

# புத்தக விற்கிரய விளம்பரம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| | 0 | 2 | 0 |
| மறுமுறைகண்டவாசகம் | 0 | 2 | 0 |
| திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம்... | 0 | 0 | 3 |
| சுந்தரமூர்த்திசுவாமிகள ச ரம் ... | 0 | 0 | 3 |
| திருநா கள் சரித்திரம் . | 0 | 0 | 3 |
| காரைக்காலம்மையார் சரித்திரம் . | 0 | 0 | 3 |
| சிறுத்தொண்டநாயனர் சரித்திரம்... | 0 | 0 | 3 |
| சண்டேசுரநாயனர் சரித்திரம் ... | 0 | 0 | 3 |
| கண்ணப்பநாயனர் ரம ... | 0 | 0 | 3 |
| விவேகசுந்தரம் நெ. க, உ, ங, ச, ரு, சா, எ, அ, (கூ & கo In the Press) பிரதி1 | 0 | 0 | 3 |
| விவேகபோதினி நெ. க, உ, ங, ச, ரு, சா, (எ & அ In the Press) பிரதி 1 | 0 | 0 | 3 |
| கடன்பட்ட கந்தன் கதை ... | 0 | 0 | 6 |
| புருஷூத்துவேஷ பூதகிகதை Part I. II. | 0 | 1 | 0 |
| மனமோகனராஜன் சரித்திரம்(inthePress | 0 | 1 | 0 |
| ஏசுகிறிஸ்துமனிதனே | | 0 | 6 |
| இந்துஜெயபேரிகை நே. க. ... | | 0 | 3 |
| ,, ,, நெ உ, ... | | 0 | 3 |
| சிவனுந் தேவனு? என்னுந் தீயநாவுக்கு ஆப்பு (இரண்டாம் பதிப்பு.) | 0 | 0 | 6 |
| வஜ்ரடங்கம் ... | 0 | 0 | 6 |
| கிறிஸ்துமதகண்டனம் | 0 | 1 | 0 |
| கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு ... | 0 | 2 | 0 |
| பைபிலும் உலகசிருட்டியின் ஆபாசமும், பாதிரிகளுக்கு ஓர் சம்பந்தி | 0 | 0 | 3 |

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| Bible Dissector (English) ... | 0 | 0 | 6 |
| One Hundred & Fi-fty Contradictions of the Bible (English.) ... | 0 | 1 | 0 |
| மாதர்நீதி ... | 0 | 6 | |
| வியாதிமூலங்கள் ... | 0 | 0 | |
| ஜனோபகாரம் ... | 0 | 1 | |
| தர்மபுரீஸ்வரர் கீர்த்தனங்கள் பதங்கள் | 0 | 2 | 6 |
| சிறுத்தொண்டநாயனர் கீர்த்தனை ... | 0 | 4 | 0 |
| சிவநாமத்துவித கீர்த்தனை ... | 0 | 8 | 0 |
| நீதிமஞ்சரி 1-பாகம் அர்த்தம் ... | 0 | 2 | 6 |
| ,, 2-பாகம் ... | | 6 | 0 |
| ஔவைக்குறள் மூலம் | | ० | 0 |
| சிவசிவவெண்பா சோமேசர் முதுமொழி வெண்பா மூலம் | 0 | | 0 |
| மாணிக்கவாசக புராணவசனம் ... | 0 | 4 | 0 |
| பழனிச்சிலேடை வெண்பா ... | 0 | 0 | 6 |
| திருத்தணிகைச் சந்நிதிமுறை ... | 0 | 4 | 0 |
| வாந்திபேதிக்கு வயித்தியம் ... | 0 | 1 | 0 |
| (1) சத்துருசகவாசம் நித்தியசங்கடம் (2) நன்மை நலந்தரும் (3) பேராசை பெருநஷ்டம் (4) அடாதுசெய்தோன் படாதுபடுவன் (5) மனக்கவலைபலத்துறைச்சல் (6) குணபூஷணிசரித்திரம் (7) கெடுவான் கேடுநினைப்பான் (8) முயற்சி திருவினையாக்கும். | ஒ-00-க. | | 0 |
| பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள்படிக்கலாமா? | | | |
| ஞானரத்நாவளி .. | 0 | 1 | 0 |
| கந்தபுராணநவநீதம் | 0 | 6 | 0 |
| யஜனஜக்கியம் | 0 | 2 | 0 |
| &c. | &c. | &c. | |

Apply sharp to S. R. Namasivaya Chettiar:— Madras.

# சிவனடியார்கள்சரித்திரம்.

## பிரதி 1-க்கு விலை பை மூன்று.

திருஞானசம்பந்தசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
திருநாவுக்கரசுசுவாமிகள்திவ்வியசரித்திரம்
சுந்தரமூர்த்திசுவாமிகள் திவ்வியசரித்திரம்.
கண்ணப்பநாயனார் திவ்வியசரித்திரம்.
சிறுத்தொண்டநாயனார் திவ்வியசரித்திரம்
சண்டேசுரநாயனார் திவ்வியசரித்திரம்.
காரைக்காலம்மையார் திவ்வியசரித்திரம்.

100-க்கு விலை ரூபா. 1—4—0 ; 1,000 க்கு ரூபா 11—0—0
கொஞ்சம் காபிகள்தான் பதிப்பிக்கப்பட்டதாதலின், வேண்டுவோர் உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும.

# ஞானரத்நாவளி.

## பிரதி 1-க்கு விலை அணா ஒன்று.

இதில் இந்துமதத்தின் உண்மைகள் அனேகம் பற்பல சாஸ்திர ஆதாரங்கொணடு விரித்து எழுதப்பட்டுள்ளன.

இஃது இந்துமதப்பிரசங்கிகளுக்கு மிக்கபயன்தரும். இம மதாபிமானிகள் யாவரும் இப்புத்தகத்தை எங்கும பரவச்செய்ய வேணடும்.

விலை பை ஆறு.



கடன்பட்டகந்தன்கதை

விலை அணா ஒன்று.



புருஷத்துவேஷபூதகிகதை